**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 37/2022**

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31–ம் நாள் செவ்வாய்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 31.10.2023 | தந்தை/கணவர் பெயர்: | சின்னப்பிள்ளை |
| பெயர்: | ராமசந்திரன் (PW-1 Chief ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | கொண்டல் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 53/2023 |
| தொழில்: | | | |

**முதல் விசாரணை : 31.10.2023.**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

15.07.2019–ல் பிரதிவாதி ரூ.60,000/–ம் பெற்றுக்கொண்டு எனக்கு எழுதி கொடுத்த புரோ நோட்டின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 02.09.2021–ல் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சட்ட அறிவிப்பை பிரதிவாதியின் பக்கத்து

வீட்டுக்காரர் பாக்கியலெட்சுமி என்பவர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டையின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான் மீண்டும் 26.10.2021–ல் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பின் அலுவலக நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 27.10.2021–ல் சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக status report–ன் கணனி வழி நகலை தாக்கல் செய்கிறேன். **அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.